# வினாத்தாள் வடிவமைப்பின் தொகுப்புகள்

| வி.எண் : 1 – 15 | பகுதி – I : சரியான விடை | 15 × 1 = 15 |
|---|---|---|

## வி.எண் : 1 – 11 செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப்பயிற்சி கேள்விகள்

<u>குறிப்பு :</u> வினா எண் 1 முதல் 11 வரை செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப்பயிற்சி பகுதியிலிருந்து ஒரு மதிப்பெண் வினாக்கள் சரியான விடையைத் தேர்வு செய்க என்ற அமைப்பில் கேட்கப்படும்.

1. "நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும் (இயல் - 4) **[SEP – 2021]**
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;" - பாரதியார்
இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) வானத்து - வைத்தாங்கே ஆ) காற்றையும் - குடித்தொரு
**இ) நிலாவையும் - குலாவும்** ஈ) வைத்தாங்கே - வெறிபடைத்தோம்

2. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக. **[PTA - 4]**
பச்சரிசியைக் கொண்டு ____ செய்து பாசிப்பருப்பினை வறுத்து ____ பிடித்து கேரட்டைத் துரவி நெய்யிட்டு____செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக் கிழங்கைச் சீவி ____ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.
அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்
**இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்** ஈ) உருண்டை சீவல், அல்வா, பொங்கல்

3. கொடுக்கப்பட்ட சொற்கள் அமைந்த பொருத்தமான தொடரைத் தெரிக. **[QR] [PTA - 1]**
(ஏரி, ஆறு, மலை, மழை, மேகம், குளம்)
அ) மலைமீது மழைபெய்து ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது
**ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின**
இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன
ஈ) மலைமீது மழைபெய்ய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது

கூடுதல் வினாக்களுக்கு அந்தந்த பகுதியில் உள்ள பலவுள் தெரிக வினாக்களை பார்க்கவும்.

## வி.எண் : 12 – 15 பாடல் பொருளுணர் திறன்

<u>குறிப்பு :</u> வினா எண் 12 முதல் 15 வரை செய்யுள் பகுதியிலிருந்து பாடல் ஒன்று கொடுக்கப்பட்டு நான்கு ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படும்.
* பாடல் இடம்பெற்ற நூல்பெயர், ஆசிரியர் பெயர், பிரித்து எழுதுதல், விரித்து எழுதுதல், சொற்பொருள், எதுகை, மோனை, இலக்கணக்குறிப்பு, பாடல் பொருள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

1. "காற்றே வா **[AUG – 2022]**
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும்
உராய்ந்து, மிகுந்த
ப்ராண-ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"

i) 'மயிலுறுத்து' என்பதன் பொருள்:
அ) விளங்கச் செய் **ஆ) மயங்கச் செய்**
இ) அடங்கச் செய் ஈ) சீராக

ii) 'ப்ராண ரஸம்' - பொருள் தருக.
**அ) உயிர்வளி** ஆ) கார்பன்-டை-ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக-டை-ஆக்ஸைடு

iii) 'மிகுந்த' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம்
**இ) பெயரெச்சம்** ஈ) வினைத்தொகை

iv) 'நீரலைகளின்' – பிரித்தெழுதுக.
**அ) நீர்+அலைகளின்** ஆ) நீரின்+அலைகளின்
இ) நீரலை+களின் ஈ) நீர்+ அலைகளின்

2. "செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."
**[MAY – 2022, SEP – 2021]**

i) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்–
அ) எந் +தமிழ் +நா ஆ) எந்த + தமிழ் + நா
**இ) எம் + தமிழ் + நா** ஈ) எந்தம் + தமிழ் + நா

ii) 'செந்தமிழ்' என்பது :
**அ) பண்புத்தொகை** ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

iii) 'உள்ளுயிரே' என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை **ஆ) தமிழ் மொழியை**
இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை

iv) 'வேறார் புகழுரையும்' - இத்தொடரில் 'வேறார்' என்பது : அ) தமிழர் ஆ) சான்றோர்
**இ) வேற்று மொழியினர்** ஈ) புலவர்

3. "செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளிதிகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"
**[6.ஆ] [PTA – 2, SEP – 2020]**

i) இப்பாடலின் ஆசிரியர்
அ) கீரந்தையார் **ஆ) குமரகுருபரர்**
இ) நம்பூதனார் ஈ) செய்குதம்பிப் பாவலர்

ii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ்ப் பருவம்-
அ) அம்மானை ஆ) சப்பாணி
இ) சிறுதேர் **ஈ) செங்கீரை**

iii) பாடலின் இலக்கிய வகை
அ) பத்துப்பாட்டு **ஆ) சிற்றிலக்கியம்**
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

iv) 'குண்டலமும் குழைகாதும்"- இலக்கணக்குறிப்பு தருக.
**அ) எண்ணும்மை** ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத்தொடர்

v) கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே-
அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
**இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது**
ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

vi) சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.
**அ) பட்ட, பொட்டொடு**
ஆ) செம்பொன், பைம்பொன்
இ) சரிந்தாட, பதிந்தாட ஈ) பண்டி, குண்டலம்

4. "நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை **[2.ஆ]**
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல, **[MDL - 19]**
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

i) இப்பாடல் இடம் பெற்ற நூல் **[PTA – 1]**
**அ) முல்லைப்பாட்டு** ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

ii) நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்
இ) நனைந்த உலகம் **ஈ) அகன்ற உலகம்**

iii) பாடலில் இடம் பெற்றுள்ள அடிஎதுகை சொற்கள்
அ) பெரும்பெயல், பொழிந்த
ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
**இ) பாடுஇமிழ், கோடுகொண்டு**
ஈ) நீர்செல, நிமிர்ந்த

iv) பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை –
அ) தடக்கை **ஆ) வளைஇ**
இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

5. "அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி, **[PTA -3]**
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச் **[7.இ]**
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,"

i) 'அசைஇ' -இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
**இ) சொல்லிசை அளபெடை**
ஈ) செய்யுளிசை அளபெடை

ii) 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' - இவ்வடியில் 'பாக்கம்' என்னும் சொல்லின் பொருள்
**அ) சிற்றூர்** ஆ) பேரூர் இ) கடற்கரை ஈ) மூதூர்

iii) பாடல் இடம்பெற்ற நூல்-
அ) சிலப்பதிகாரம் **ஆ) மலைபடுகடாம்**
இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்

iv) பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்
**அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு**
ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி
இ) சேந்த, செயலை, செப்பம், சிலம்பு
ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே

6. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி **[5.அ]**
மருளை அகற்றி மதிக்கும் தெருளை **[PTA-4]**
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று."

i) பாடல் இடம்பெற்ற நூல்-
**அ) நீதிவெண்பா** ஆ) புறநானூறு
இ) வெற்றி வேற்கை ஈ) கொன்றை வேந்தன்

ii) உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது
அ) அன்பு **ஆ) கல்வி**
இ) மயக்கம் ஈ) செல்வம்

iii) பாடலின் சீர் மோனைச் சொற்கள் -
அ) அருளை, அருத்துவதும்
**ஆ) அருளை, அறிவை**
இ) அகற்றி, அருந்துணையாய்
ஈ) அறிவை, அகற்றி

iv) அருந்துணையாய்-இச்சொல்லைச் பிரித்தால்
அ) அருந்துணை + யாய்
ஆ) அருந்து + துணையாய்
**இ) அருமை + துணையாய்**
ஈ) அரு + துணையாய்

வினாத்தாள் தொகுப்பு

7. "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் -நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு." **[PTA - 5]**

i) இப்பாடல் இடம்பெற்ற நூல் - **[1.ஆ]**
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) குறுந்தொகை **ஈ) தனிப்பாடல் திரட்டு**

ii) பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி.
**அ) இரட்டுற மொழிதல் அணி** ஆ) தீவக அணி
இ) வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

iii) தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது
அ) சங்கப் பலனை **ஆ) கடல்**
இ) அணிகள் ஈ) புலவர்கள்

iv) தொழிற்பெயர் அல்லாத சொல் -
அ) துய்ப்பதால் ஆ) மேவலால்
**இ) அணிகலன்** ஈ) கண்டதால்

8. "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக் **[PTA- 6]**
கரு வளர் வானத்து இசையில் தோன்றி, **[4.ஆ]**
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"

i) ஊழ் ஊழ் - இலக்கணக் குறிப்பு
அ) இரட்டைக் கிளவி ஆ) பண்புத்தொகை
**இ) அடுக்குத்தொடர்** ஈ) வினைத்தொகை

ii) பாடலின் ஆசிரியர்
**அ) கீரந்தையார்** ஆ) பூதஞ்சேந்தனார்
இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்

iii) பாடலில் உணர்த்தப்படும் கருத்து
அ) தத்துவக் கருத்து **ஆ) அறிவியல் செய்தி**
இ) நிலையாமை ஈ) அரசியல் அறம்

iv) விசும்பு, இசை,ஊழி -பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே
அ) காற்று,ஓசை,கடல் ஆ) மேகம்,இடி,ஆழம்
**இ) வானம், பேரொலி, யுகம்**
ஈ) வானம், காற்று, காலம்

***குறிப்பு : சொல்லும் பொருளும் 12 - 15 வரை உள்ள வினாக்களில் கேட்கப்படும்.***

## சொல்லும் பொருளும்

__குறிப்பு :__ பாடபுத்தகத்தில் இடம்பெற்றுள்ள சொல்லும் பொருளும் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| **1. அமுதஊற்று** | 1. துய்ப்பது - கற்பது, தருதல் | 2. மேவலால் - பொருந்துதலால், பெறுதலால் | |
| **2. உயிரின் ஓசை** | 3. நேமி - சக்கரம் | 4. லயத்துடன் - சீராக | 5. மயலுறுத்து - மயங்கச்செய் |
| | 6. கோடு - மலை | 7. தூஉய் - தூவி | 8. ப்ராண-ரஸம் - உயிர்வளி |
| | 9. சுவல் - தோள் | 10. விரிச்சி - நற்சொல் | 11. நறுவீ - நறுமணமுடைய மலர்கள் |
| | 12. நனந்தலை உலகம் - அகன்ற உலகம் | 13. கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல் | |
| **3. கூட்டாஞ்சோறு** | 14. அல்கி - தங்கி | 15. அருகுற - அருகில் | 16. முகமன்- விருந்தோம்பல் சொற்கள் |
| | 17. கடும்பு - சுற்றம் | 18. நரலும் - ஒலிக்கும் | 19. அசைஇ - இளைப்பாறி |
| | 20. ஆரி - அருமை | 21. படுகர் - பள்ளம் | 22. வேவை - வெந்தது |
| | 23. இறடி - தினை | 24. வயிரியம் - கூத்தர் | 25. பொம்மல் - சோறு |
| **4. நான்காம் தமிழ்** | 26. ஊழி - யுகம் | 27. மாளாத - தீராத | 28. சுடினும் - சுட்டாலும் |
| | 29. ஊழ் - முறை | 30. விசும்பு - வானம் | 31. மாயம் - விளையாட்டு |
| | 32. தண்பெயல் - குளிர்ந்த மழை | 33. ஈண்டி - செறிந்து திரண்டு | |
| | 34. பீடு - சிறப்பு | 35. ஆர்தருபு - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த | |
| **5. மணற்கேணி** | 36. தார் - மாலை | 37. தமர் - உறவினர் | 38. கேள்வியினான் - நூல் வல்லான் |
| | 39. முடி - தலை | 40. கவரி - விசிறி | 41. நீபவனம் - கடம்பவனம் |
| | 42. முனிவு - சினம் | 43. நுவன்ற - சொல்லிய | 44. மீனவன் - பாண்டிய மன்னன் |
| | 45. கேண்மையினான் - நட்பினன் | 46. அகத்து உவகை - மனமகிழ்ச்சி | |
| **6. நிலா முற்றம்** | 47. பண்டி - வயிறு | 48. அசும்பிய - ஒளி வீசுகிற | 49. முச்சி - தலையுச்சிக் கொண்டை |
| **7. விதைநெல்** | 50. தூசு - பட்டு | 51. காருகர் - நெய்பவர் | 52. சுண்ணம் - நறுமணப்பொடி |
| | 53. நொடை - விலை | 54. துகிர் - பவளம் | 55. ஓசுநர் - எண்ணெய் விற்போர் |
| | 56. கிழி - துணி | 57. வெறுக்கை - செல்வம் | 58. மண்ணீட்டாளர் - சிற்பி |
| | 59. பாசவர் - வெற்றிலை விற்போர் | 60. கண்ணுள் வினைஞர் - ஓவியர் | |
| **9. அன்பின் மொழி** | 61. கொம்பு - கிளை | 62. சேக்கை - படுக்கை | 63. வாய்ந்த - பயனுள்ள |
| | 64. புழை - துளை | 65. யாக்கை - உடல் | 66. இளங்கூழ் - இளம்பயிர் |
| | 67. கான் - காடு | 68. பிணித்து - கட்டி | 69. காய்ந்தேன் - வருந்தினேன் |
| | 70. தேம்ப - வாட | 71. தயங்கி - அசைந்து | 72. உய்முறை - வாழும் பூமி |
| | 73. அசும்பு - நிலம் | 74. கடிந்து - விலக்கி | 75. ஓர்ந்து - நினைத்து |
| | 76. படலை - மாலை | 77. துணர் - மலர்கள் | 78. உவமணி - மணமலர் |

## இலக்கணக்குறிப்பு

**குறிப்பு :** பாடபுத்தகத்தில் இடம்பெற்றுள்ள இலக்கணக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | மூதூர், நன்மொழி, செந்தீ | பண்புத்தொகைகள் |
| 2. | உறுதுயர், வளர்வானம், பயில்தொழில், காய்மணி, உய்முறை, செய்முறை | வினைத்தொகைகள் |
| 3. | தடக்கை | உரிச்சொல் தொடர் |
| 4. | ஊழ் ஊழ் | அடுக்குத் தொடர் |
| 5. | வியத்தல், நோக்கல், எழுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல் | தொழிற்பெயர்கள் |
| 6. | என்னா | அசைச்சொற்கள் |
| 7. | கணீர் (கண்ணீர் என்பதன் இடைக்குறை) | இடைக்குறை |
| 8. | அசைஇ, கெழீஇ | சொல்லிசை அளபெடை |
| 9. | கேள்வியினான் **[MDL – 19]** | வினையாலணையும் பெயர் |
| 10. | காக்கென்று (காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்) | தொகுத்தல் விகாரம் |
| 11. | மெய்முறை | வேற்றுமைத்தொகை |
| 12. | ஆடுக | வியங்கோள் வினைமுற்று |
| 13. | காடனுக்கும் கபிலனுக்கும், குண்டலமும் குழைகாதும், வண்ணமும் சுண்ணமும் | எண்ணும்மை |
| 14. | கைதொழுது | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| 15. | வாரா (ஒன்றன்) | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| 16. | கை முறை | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |

| வி.எண் : 16 – 21★ | பகுதி – II : பிரிவு – 1<br>உரைநடை மற்றும் செய்யுள் வினாக்கள் | 4× 2= 8 |
|---|---|---|

**குறிப்பு :**
- ❋ இப்பகுதியில் செய்யுள் மற்றும் உரைநடைப் பகுதியில் இருந்து இரண்டு மதிப்பெண் வினாக்கள் 6 வினாக்கள் கொடுத்து 4 எழுதுமாறு கேட்கப்படும்.
- ❋ **விடைகளுக்கேற்ற வினா** அமைத்தலில் ஒரு வினாவும் அவற்றுள் கேட்கப்படும்.
- ❋ வினா எண் **21 கட்டாய வினாவாகும்**. இது திருக்குறள் பகுதியில் அமையும். தொடக்கம் கொடுத்து அல்லது முடிவு கொடுத்து ஒரு குறள் கேட்கப்படும் அல்லது திருக்குறள் தொடர்பான கேள்விகள் இடம்பெறும்.

## விடைகளுக்கேற்ற வினா அமைத்தல்

1. அ) **கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.**
   பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் யார்? **[APR - 2023]**

   ஆ) **தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.**
   தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது?

2. அ) **சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.** **[AUG-2022]**
   செய்குதம்பிப் பாவலர் எந்த கலையில் சிறந்து விளங்கினார்?

   ஆ) **பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்.**
   பரஞ்சோதி முனிவர் எங்கு பிறந்தார்?

3. அ) **சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி இலக்கிய அறிவு பெற்றார்.** **[MAY-2022]**
   ம.பொ.சி எதன் மூலம் இலக்கிய அறிவை பெற்றார்?

   ஆ) **1906 -ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.**
   எந்த ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்?

4. அ) **உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.** **[SEP-2021]**
   உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

   ஆ) **தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.**
   தமிழ்த்தென்றல் திருவி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் யார்?

5. **அ) ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப்பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.** **[SEP - 2020]**
ம.பொசி. பிள்ளைப்பருவத்தில் எவ்வாறு இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்?
**ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.**
நெய்தல் நிலத்தவர் பாணர்களை எவற்றை கொடுத்து வரவேற்றனர்?

6. **அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது. [PTA-1]**
தப்பாட்டம் எதைப் பொறுத்து ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது?
**ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.**
ஒயிலாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் யாவை?

7. **அ) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோருக்காகக் கட்டப்பட்டன.**
யாருடைய ஆட்சிக் காலத்தில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோருக்காகக் கட்டப்பட்டன?
**ஆ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.** **[PTA-2]**
'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடும் தமிழ்ச்சங்கம் எது?

8. **அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.**
நாட்டு மக்களின் அறிவொழுக்கம் எவ்வாறு அமையும்? **[PTA – 3, MDL - 19]**
**ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.**
சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்? **[PTA – 3]**
**இ) 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.**
கன்னியாகுமரி மாவட்டம் எப்போது தமிழ்நாட்டுடன் இணைந்தது? **[MDL - 19]**

9. **அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.** **[PTA – 4]**
எந்த செயற்கை நுண்ணறிவுக் கருவி சில நிமிடங்களில் புற்றுநோயைக் கண்டுபிடித்தது?
**ஆ) வேர்டுஸ்மித் என்ற எழுத்தாளி, தகவல்களைக் கொண்டு சில நொடிகளில் அழகான கட்டுரையை உருவாக்கிவிடும்.**
சில நொடிகளில் தகவல்களைக் கொண்டு அழகான கட்டுரையை உருவாக்குவது எது?

10. **அ) சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.**
சாலை விதிகளில் முதன்மையான விதி எது? **[PTA – 5]**
**ஆ) ஓட்டுநர் உரிமம், ஊர்தியின் பதிவுச் சான்றிதழ், ஊர்தியின் வழி மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் போன்றவற்றை ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டும்.**
ஊர்தி ஓட்டுபவர்கள் கட்டாயமாகக் கையில் வைத்திருக்கவேண்டிய ஆவணங்கள் யாவை?

11. **அ) மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.**
மொழிபெயர்ப்பு எவ்வாறு மொழி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது? **[PTA - 6]**
**ஆ) தமிழ்நூல்கள், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி வங்கமொழி, மராத்தி மொழி போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.**
தமிழ்நூல்கள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?

## வி.எண் : 21★ கட்டாய வினா – திருக்குறள்

<u>குறிப்பு :</u> இப்பகுதி வினாவிற்கு விடையளிக்க 3 மற்றும் 4 கொடுக்கப்பட்டுள்ள திருக்குறள்களை நன்கு படித்துக் கொள்க. வினாவில் கேட்கப்பட்ட குறளைப் படிப்பதற்கு பக்க எண் : 3-4 காண்க.

| வி.எண் : 22 – 28 | பகுதி – II : பிரிவு – 2<br>இலக்கணம் மற்றும் மொழிப்பயற்சி | 5 × 2 = 10 |
|---|---|---|

<u>குறிப்பு :</u> இப்பகுதியில் இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சிப் பகுதியில் இருந்து இரண்டு மதிப்பெண் வினாக்கள் **7** வினாக்கள் கொடுத்து **5** எழுதுமாறு கேட்கப்படும்.

- ❋ பகுபத உறுப்பிலக்கணம் ஒரு வினாவாக கேட்கப்படும்.
- ❋ இலக்கண கேள்விகளுக்கு இலக்கணப் பகுதியில் பயிற்சி செய்யவும்.
- ❋ மொழிப்பயிற்சி கேள்விகளுக்கு பாடப்பகுதியில் உள்ள அனைத்து மொழிப்பயிற்சி பகுதிகளையும் நன்கு பயிற்சி செய்யவும். மேலும் இங்கு கூடுதலாகச் சில தலைப்புகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. அவற்றையும் பயிற்சி செய்துகொள்ளவும்.

## பகுபத உறுப்பிலக்கணம்

| எ.கா : வாழ்க = வாழ் + க | வாழ் - பகுதி ; க - வியங்கோள் வினைமுற்று விகுதி |
|---|---|
| 1. பகுதி | பகுபதத்தின் முதலில் நிற்கும். (வினைப்பகுபதத்தில் ஏவல்வினை போல் வரும்) |
| 2. விகுதி | பகுபதத்தின் கடைசியில் வரும். (வினைமுற்றில் வரும் விகுதியானது பால், எண், இடம், ஆகியவற்றை உணர்த்தும்) |
| 3. இடைநிலை | பெயருக்கேற்றாற்போல் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும். (காலம் காட்டும்) |
| 4. சந்தி | பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவில் வரும். |
| 5. சாரியை | இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| 6. விகாரம் | மேற்கண்ட உறுப்புகளில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். |

### முக்கிய குறிப்புகள்

- த், க், ப் - என்னும் மூன்று எழுத்துகளுள் ஒன்றே பெரும்பாலும் சந்தியாக வரும்.
- சந்தி வரவேண்டிய இடத்தில் புள்ளியில்லாத எழுத்து வந்தால் அதனைச் சாரியை எனக் குறிப்பிட வேண்டும்.
- அன், அ – என்னும் இரண்டனுள் ஒன்றே சாரியையாக வரும்.
- சாரியை வரவேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப்பேறு எனக் குறிப்பிடல் வேண்டும்.
- விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப்பேறு ஆகும்.

### இயல் - 2. உயிரின் ஓசை

**பொறித்த** = பொறி + த் + த் + அ [PTA - 3]

பொறி - பகுதி ; த் - சந்தி ; த் - இறந்தகால இடைநிலை ; அ - பெயரெச்ச விகுதி

### இயல் - 3. கூட்டாஞ்சோறு

**உரைத்த** = உரை + த் + த் + அ [PTA-4]

உரை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**வருக** = வா (வரு) + க [PTA-2]

வா - பகுதி (‘வரு’ எனத் திரிந்தது விகாரம்)
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

**மலைந்து** = மலை+ த்(ந்) +த் + உ [SEP – 2020]

மலை - பகுதி
த் - சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**பொழிந்த** = பொழி + த்(ந்) + த் + அ

பொழி - பகுதி
த் - சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

### இயல் - 4. நான்காம் தமிழ்

**கிளர்ந்த** = கிளர் + த்(ந்) + த் + அ

கிளர் - பகுதி
த் - சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

### இயல் - 5. மணற்கேணி

**தணிந்தது** = தணி + த்(ந்) + த் + அ + து

தணி - பகுதி
த் - சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று விகுதி

### இயல் - 6. நிலா முற்றம்

**பதிந்து** = பதி + த்(ந்) + த் + உ

பதி - பகுதி
த் - சந்தி, ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

### இயல் - 7. விதைநெல்

**மயங்கிய** = மயங்கு + இ(ன்) + ய் + அ [SEP-21]

மயங்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை; ‘ன்’ புணர்ந்து கெட்டது
ய் - உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி

### இயல் - 9. அன்பின் மொழி

**அறியேன்** = அறி + ய் + ஆ + ஏன் [PTA-5]

அறி - பகுதி; ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**ஒலித்து** = ஒலி + த் + த் + உ [APR - 2023] [AUG-2022, PTA-6]

ஒலி - பகுதி; த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## மொழிப்பயிற்சிப் பகுதி

### 1. கலைச்சொல் தருக.

- ✱ Vowel - உயிரெழுத்து [AUG - 2022, PTA – 1]
- ✱ Homograph - ஒப்பெழுத்து [PTA –1]
- ✱ Discussion - கலந்துரையாடல் [AUG - 2022]
- ✱ Tornado - சூறாவளி [PTA – 6]
- ✱ Tempest - பெருங்காற்று [PTA – 6]
- ✱ Epic literature - காப்பிய இலக்கியம் [PTA – 5]
- ✱ Folk literature - நாட்டுப்புற இலக்கியம் [PTA - 5, SEP - 2021]
- ✱ Modern literature - நவீன இலக்கியம் [MDL – 19]
- ✱ Ultraviolet rays - புற ஊதாக் கதிர்கள் [PTA – 2]
- ✱ Space Technology - விண்வெளித் தொழில்நுட்பம் [PTA – 2]
- ✱ Aesthetics - அழகியல், முருகியல் [PTA – 4]
- ✱ Artifacts - கலைப் படைப்புகள் [SEP- 2020]
- ✱ Myth - தொன்மம் [PTA – 4, SEP – 2020]
- ✱ Consulate - துணைத்தூதரகம் [SEP - 2021]
- ✱ Belief - நம்பிக்கை [PTA - 3, MAY - 2022]
- ✱ Renaissance - மறுமலர்ச்சி [PTA – 3]
- ✱ Philosopher - மெய்யியலாளர் [MAY - 2022]
- ✱ Whirlwind - சுழல்காற்று
- ✱ Devotional literature - பக்தி இலக்கியம்
- ✱ Regional literature - வட்டார இலக்கியம்
- ✱ Biotechnology - உயிரித் தொழில்நுட்பம்
- ✱ Infrared rays - அகச்சிவப்புக் கதிர்கள்
- ✱ Humanism - மனிதநேயம்
- ✱ Cultural values - பண்பாட்டுவிழுமியங்கள்
- ✱ Thesis - ஆய்வேடு
- ✱ Intellectual - அறிவாளர்
- ✱ Irrigation - பாசனம்
- ✱ Territory - நிலப்பகுதி
- ✱ Symbolism - குறியீட்டியல்
- ✱ Patent - காப்புரிமை [APR - 2023]
- ✱ Storm - புயல் [APR - 2023]
- ✱ Sea Breeze - கடற்காற்று
- ✱ Guild - வணிகக்குழு
- ✱ Land Breeze - நிலக்காற்று
- ✱ Monolingual- ஒரு மொழி
- ✱ Conversation - உரையாடல்
- ✱ Emblem - சின்னம்
- ✱ Terminology - கலைச்சொல்
- ✱ Document - ஆவணம்
- ✱ Cabinet - அமைச்சரவை
- ✱ Consonant - மெய்யெழுத்து
- ✱ Classical literature - செவ்விலக்கியம்
- ✱ Ancient literature - பண்டைய இலக்கியம்
- ✱ Nanotechnology - மீநுண்தொழில்நுட்பம்
- ✱ Cosmic rays - விண்வெளிக் கதிர்கள்
- ✱ Revivalism - மீட்டுருவாக்கம்
- ✱ Cultural Boundaries - பண்பாட்டு எல்லை

### 2. அகராதியில் காண்க.

- ✱ அடவி - காடு
- ✱ செறு - கோபம்
- ✱ கங்குல் - இரவு
- ✱ தால் - நாக்கு
- ✱ மிரியல் - மிளகு
- ✱ ஆர்கலி - ஆரவாரம்
- ✱ உழுவை - மீன்வகை
- ✱ மருள் - மயக்கம்
- ✱ துரிஞ்சில் - உசிலமரம்
- ✱ அவல் - குளம்
- ✱ பழனம் - பொய்கை
- ✱ கனலி - நெருப்பு
- ✱ அகவுதல் - ஒலித்தல்
- ✱ அதசி - சணல்
- ✱ செவ்வை - நேர்மை
- ✱ தூவல் - மழை தூறல்
- ✱ வருத்தனை - பெருகுதல்
- ✱ அடிச்சுவடு - காலடிச்சுவடு
- ✱ சுவல் - மேடு
- ✱ அழல் - நெருப்பு
- ✱ மன்றல் - திருமணம்
- ✱ அணிமை - அண்மை
- ✱ நகல் - பிரதி
- ✱ மதுரகவி - சொல்வளம்
- ✱ அவிர்தல் - ஒளிர்தல்
- ✱ உவா - பருவகாலம்
- ✱ பூட்கை - கொள்கை
- ✱ புறவு - முல்லை நிலம்
- ✱ அகன்சுடர் - பரந்து விரிந்த சுடர்
- ✱ கட்புள் - விழித்திருக்கும் பறவை
- ✱ குணதரன் - நற்குணமுடையவன்
- ✱ கொடுவாய் - வளைந்த வாய்
- ✱ திருவில் - சிறப்பான வில்
- ✱ ஏந்தெழில் - மிகுந்த அழகு
- ✱ அகராதி - அகரவரிசைச் சொற்பொருள் நூல்
- ✱ ஆசுகவி - கொடுத்த பொருளை அடுத்த கணத்தில் பாடும் கவி.
- ✱ சித்திரகவி - சித்திரத்திற்கு ஏற்றவாறு அனைத்து நயங்களும் அமையப் பாடப்படும் பாட்டு.
- ✱ வித்தாரகவி - விரித்துப் பாடப்பெறும் பாட்டுப் பாடும்புலவன்.

## 3. நிறுத்தற்குறியீடு

### பொதுவான குறிப்புகள்

| வகைகள் | எ.கா |
|---|---|
| **காற்புள்ளி (,)**<br>பொருள்களை எண்ணும் நிலை, விளி, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்குமுன், எனவே, எனினும், ஆயினும், ஆதலின், ஆதலால், ஆகவே, முதலிய இணைப்புச் சொற்களின்பின், முகவரியில் இறுதிவரி தவிர்த்துப் பிற இடங்களில் காற்புள்ளி இடவேண்டும். | ❖ நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள்.<br>❖ மகனே, நான் சொல்வதைக் கேள். |
| **அரைப்புள்ளி (;)**<br>ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும், எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இட வேண்டும். | ❖ சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம் ; முத்தமிழ்க் காப்பியம் ; மூவேந்தரையும் பாடும் காப்பியம்.<br>❖ இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை. |
| **முக்காற் புள்ளி (:)**<br>ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி இடவேண்டும். | ❖ மத்தேயு, 8 : 6<br>❖ பெயர் : கனிமொழி<br>❖ முக்கனி என்பன வருமாறு : மா, பலா, வாழை |
| **முற்றுப் புள்ளி (.)**<br>சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற் குறுக்கம், கையெழுத்து முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும். | ❖ கந்தன் கடைக்குச் சென்றான்.<br>❖ 29.10.2019<br>❖ அண்ணா நகர், பாலக்கரை, திருச்சி-20. |
| **வினாக்குறி (?)**<br>ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்க்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இடவேண்டும். | ❖ இங்கே இருப்பவர் யார்?<br>❖ நீ தருவாயா? |
| **உணர்ச்சிக் குறி (!)**<br>மகிழ்ச்சி, அச்சம், வியப்பு, அவலம், வாழ்த்துதல், வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின் பின்(!) இக்குறி இடல்வேண்டும். | ❖ வெற்றி! வெற்றி!<br>❖ பாம்பு! பாம்பு!<br>❖ வாழ்க! வாழ்க! |
| **ஒற்றை மேற்கோள்குறி (‘ ’)**<br>இக்குறி தற்சுட்டின்கண்ணும் (ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல்), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி வரும். | ❖ ‘ஏ’ என்று சொன்னான்.<br>❖ திருவள்ளுவர், ‘திருக்குறள்’ என்னும் நூலை இயற்றினார். |
| **இரட்டை மேற்கோள்குறி (“ ”)**<br>பொன்மொழிகளைக் குறிப்பிடும் இடத்தும், நேர்க்கூற்றுத் தொடரிலும் இரட்டை மேற்கோள்குறி இடவேண்டும். | ❖ இராமன், “நாளை வருகிறேன்” என்று கூறிச் சென்றான்.<br>❖ “அறம் செய விரும்பு” என்றார் ஔவையார். |

**தேவையான இடங்களில் நிறுத்தற்குறி இடுக.**

1. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். **[QR]**
இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க. **[PTA -3, SEP - 2020]**
    அ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று ‘அறுதியிட்டுக்’ கூறுகிறார்!
    **ஆ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.**
    இ) திருவள்ளுவர், “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்று அறுதியிட்டுக் கூறுகிறார்!
    ஈ) ‘திருவள்ளுவர்’, ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

**புத்தக வினாக்களுக்கு பக்க எண் : 89(இயல்– 7), 129(இயல்– 9) காண்க**

## 4. தமிழெண்கள்

<u>குறிப்பு</u> : எண்ணுருக்களைக் கொடுத்து அதற்கு இணையான தமிழெண்களை எழுதுதல்.

**1 முதல் 100 வரை உள்ள தமிழெண்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 21 | உக | 41 | சக | 61 | சாக | 81 | அக |
| 2 | உ | 22 | உஉ | 42 | சஉ | 62 | சாஉ | 82 | அஉ |
| 3 | ங | 23 | உங | 43 | சங | 63 | சாங | 83 | அங |
| 4 | ச | 24 | உச | 44 | சச | 64 | சாச | 84 | அச |
| 5 | ரு | 25 | உரு | 45 | சரு | 65 | சாரு | 85 | அரு |
| 6 | சா | 26 | உசா | 46 | சசா | 66 | சாசா | 86 | அசா |
| 7 | எ | 27 | உஎ | 47 | சஎ | 67 | சாஎ | 87 | அஎ |
| 8 | அ | 28 | உஅ | 48 | சஅ | 68 | சாஅ | 88 | அஅ |
| 9 | கூ | 29 | உகூ | 49 | சகூ | 69 | சாகூ | 89 | அகூ |
| 10 | க0 | 30 | ங0 | 50 | ரு0 | 70 | எ0 | 90 | கூ0 |
| 11 | கக | 31 | ஙக | 51 | ருக | 71 | எக | 91 | கூக |
| 12 | கஉ | 32 | ஙஉ | 52 | ருஉ | 72 | எஉ | 92 | கூஉ |
| 13 | கங | 33 | ஙங | 53 | ருங | 73 | எங | 93 | கூங |
| 14 | கச | 34 | ஙச | 54 | ருச | 74 | எச | 94 | கூச |
| 15 | கரு | 35 | ஙரு | 55 | ருரு | 75 | எரு | 95 | கூரு |
| 16 | கசா | 36 | ஙசா | 56 | ருசா | 76 | எசா | 96 | கூசா |
| 17 | கஎ | 37 | ஙஎ | 57 | ருஎ | 77 | எஎ | 97 | கூஎ |
| 18 | கஅ | 38 | ஙஅ | 58 | ருஅ | 78 | எஅ | 98 | கூஅ |
| 19 | ககூ | 39 | ஙகூ | 59 | ருகூ | 79 | எகூ | 99 | கூகூ |
| 20 | உ0 | 40 | ச0 | 60 | சா0 | 80 | அ0 | 100 | க00 |

**நினைவில் கொள்ள...**

| | | |
|---|---|---|
| 1 | க | **க**டலை |
| 2 | உ | **உ**ருண்டையை |
| 3 | ந | **நு**ணுக்கி |
| 4 | ச | **ச**மைத்து |
| 5 | ரு | **ரு**சித்து |
| 6 | சா | **சா**ப்பிட |
| 7 | எ | **எ**ன்னை |
| 8 | அ | **அ**ம்மா |
| 9 | கூ | **கூ**ப்பிட்டாள். |

1. நாள் காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதைத் தமிழெண்களில் எழுதுக. **[PTA - 1]**
   ஞாயிற்றுக்கிழமை - 20 - உ0 | புதன்கிழமை - 23 - ***உ ந*** | சனிக்கிழமை - 26 - ***உ சா***
2. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, **[QR] [PTA – 2, SEP - 2020]**
   நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.
   அ) ஆலமரம், வேப்பமரம் - *ரு, க* **ஆ) ஆலமரம், வேலமரம் - *ச, உ*** *(4, 2)*
   இ) அரசமரம், வேங்கைமரம் - *க, உ* ஈ) வேப்பமரம், ஆலமரம் - *ச, சா*

****புத்தக வினாக்களுக்கு பக்க எண் : 13(இயல்– 1), 97(இயல்– 7), 132(இயல்– 9) காண்க****

| வி.எண் : 29 – 31 | பகுதி – III : பிரிவு – 1<br>உரைநடை பொருளுணர் திறன் | 2 × 3 = 6 |
|---|---|---|

<u>குறிப்பு :</u> ✱ இப்பகுதியில் உரைநடைப் பகுதியிலிருந்து மூன்று மதிப்பெண் வினாக்கள் 3 வினாக்கள் கொடுத்து 2 எழுதுமாறு கேட்கப்படும்.
✱ ஒரு வினா 'உரைப்பத்தியைப் படித்து விடை எழுதுக' என்ற கேள்வி கேட்கப்படும்.

### உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

<u>குறிப்பு :</u> ✱ உரைப்பத்தியை ஓரிரு முறை நன்கு படித்துவிட்டு வினாவிற்கேற்ற விடையைச் சொந்த நடையில் எழுத வேண்டும். உரைப்பத்தியை அப்படியே எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.
✱ 42-வது கேள்வியில் செவிமாற்றுத் திறன் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் கேள்வியும் இவ்வடிவிலேயே அமையும். அங்கு 5 கேள்விகள் கேட்கப்படும்.

1. மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும் போது நான் வாடைக் காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன். **[APR-2023]**

**(i) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது?**
மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை எனப்படுகிறது.

**(ii) ஊதைக் காற்று என்று அழைப்பதேன்?**
பனிப் பகுதியிலிருந்து வீசும் மிகவும் குளிர்ச்சியான காற்று ஊதைக் காற்று என அழைக்கப்படுகிறது.

**(iii) மேற்கு என்பதன் மற்றொரு பெயர் என்ன?**
மேற்கு என்பதன் மற்றொரு பெயர் குடக்கு.

**(iv) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?**
வாடை என்பது வடக்கு திசையைக் குறிக்கிறது.

**(v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.**
காற்று வீசும் திசைகள்

| | |
|---|---|
| 2. "போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. **[APR - 2023]** | **(i) எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது?**<br>"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது.<br>**(ii) பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**<br>* புரவி ஆட்டம்<br>* புரவி நாட்டியம்<br>**(iii) யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது?**<br>மராட்டியர் காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது. |
| 3. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது. **[MAY–2022]** | **(i) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?**<br>அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.<br>**(ii) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?**<br>அறம் கூறும் அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.<br>**(iii) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?**<br>மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கதாக இருந்தது என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. |
| 4. மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் - சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்ககால அறங்கள் இயல்பானவை. **[MAY–2022]** | **(i) மனிதன் எப்படிப்பட்டவன்?**<br>மனிதன் தனியானவன் அல்லன். மனிதன் சமூகக் கடலின் ஒரு துளி.<br>**(ii) மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது?**<br>மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் தன்னை இணைத்துக் கொள்ளும்போது அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது.<br>**(iii) மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும்?**<br>மனிதன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.<br>**(iv) அறநெறிக்காலம் எனப்படுவது எது?**<br>சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர்.<br>**(v) சங்ககால அறங்கள் எப்படிப்பட்டவை?**<br>சங்ககால அறங்கள் இயல்பானவை. |
| 5. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டவனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. **[SEP – 2021]** | **(i) தமிழ்நாட்டு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?**<br>தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.<br>**(ii) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.**<br>கோதுமையின் வகைகள் : சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை<br>**(iii) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.**<br>தமிழ்நாட்டில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் போன்ற வகைகள் உண்டு. அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. |

| | |
|---|---|
| 6. கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமூக அமைப்பின் சமூக முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர் ஜெயகாந்தன். நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபி - மானத்தை வாசகர் நெஞ்சங்களில் விதைத்தவர். இவருடைய படைப்புகளுக்குக் குடியரசுத் தலைவர் விருது, சாகித்திய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது மற்றும் ஞானபீட விருது, தாமரைத்திரு விருதுகளும் கிடைத்துள்ளன. "நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும், எனது தனி முயற்சியின் பயனுமாகும்" என்று கூறுகிறார் ஜெயகாந்தன். 'அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது' என்பது அன்னாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. **[SEP – 2021]** | **i) ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?**<br>ஜெயகாந்தன் குடியரசுத் தலைவர் விருது, சாகித்திய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது, ஞானபீட விருது மற்றும் தாமரைத்திரு விருது ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.<br>**ii) மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சில் விதைத்தவர் யார்?**<br>ஜெயகாந்தன்<br>**iii) வாசகர் மனதில் ஜெயகாந்தன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தினார்?**<br>மனிதாபிமானம் மற்றும் சமூக அக்கறை போன்ற எண்ணங்களை வாசகர் மனதில் ஏற்படுத்தினார்.<br>**iv) எது படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது?**<br>'அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது' என்பது ஜெயகாந்தன் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.<br>**v) உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு எழுதுக.**<br>ஜெயகாந்தனின் சிறப்புகள் |
| 7. தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்து கொள்கிறது. **[PTA - 1]** | **i) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?**<br>கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது.<br>**ii) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுத்துகிறது?**<br>செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்து கொள்கிறது.<br>**iii) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?**<br>உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. |
| 8. மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். **[PTA - 1]** | **i) மொழிபெயர்ப்பினால் மொழிவளம் எவ்வாறு பயன்பெறுகிறது?**<br>மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.<br>**ii) மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவதன் காரணம் யாது?**<br>கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள்.<br>**iii) மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் முக்கியத் தாக்கம் என்ன?**<br>மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும், இலக்கியத்திலும், பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.<br>**iv) பிறமொழி இலக்கிய அறிவு மூலம் எவற்றை வளப்படுத்தலாம்?**<br>பிறமொழி இலக்கிய அறிவு மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது.<br>**v) பிற இனத்தவரின் பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கம் போன்வற்றை எதன்மூலம் அறியலாம்?**<br>பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை மொழிபெயர்ப்பின் மூலம் அறியமுடிகிறது. |

| | |
|---|---|
| 9. அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக்கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் தமது செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார். **[PTA- 2]** | **i) ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்?**<br>ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.<br>**ii) ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?**<br>அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினைப் பெற்றார்.<br>**iii) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி, அதனை எவ்வாறு ஈடு செய்தார்?**<br>ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெற்றார். |
| 10. மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்: பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்: மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்: வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்: நாடு விடுதலை பெற்ற பிறகு, பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. **[PTA-2, SEP-2020]** | **i) அனைத்துலக அறிவை நாம் எவ்வாறு பெறலாம்?**<br>மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.<br>**ii) பலநாட்டுத் துதரகங்கள் மொழிபெயர்ப்பு மூலம் எவ்வெவற்றைக் கற்றுத் தருகின்றன?**<br>இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றைக் கற்றுத் தருகிறது.<br>**iii) மொழிபெயர்ப்பைக் கல்வியாகக் கற்பதன் பயன்கள் இரண்டினை எழுதுக.**<br>• மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்:<br>• வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்:<br>**iv) பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் குறித்து எழுதுக.**<br>• பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன.<br>• பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.<br>**v) மொழிபெயர்ப்புக்கல்வி இன்றைய காலகட்டத்திற்குத் தேவையா?**<br>மொழிபெயர்ப்புக் கல்வி இன்றைய காலகட்டத்திற்குத் தேவை.<br>**vi) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**<br>மொழிபெயர்ப்பு |
| 11. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். **[PTA – 3, 6, SEP – 2020]** | **i) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?**<br>போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப்போர் செய்யாமையைக் குறிக்கிறது.<br>**ii) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது? (அ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?**<br>தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.<br>**iii) போரில் யாருக்கொல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?(அ) எவ்வாறு போர் புரிய வேண்டும்?**<br>போரின்போது பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. |

12. வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா" "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மனிதனை துன்பத்தின் கதவுகளைத் திறப்பதும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல் என்று பொய்யைக் குறிப்பிடுகின்றது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. **[PTA-3]**

**i) வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது?**
'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.

**ii) வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை இலக்கியங்கள் எவ்விதம் கூறுகின்றன?**
வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா" "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**iii) மனிதனைத் தாழ்த்துவது எது?**
பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

**iv) நிலம் புடைபெயர்ந்தாலும் செய்யக்கூடாதது எது?**
நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது.

**v) நாக்கு எதனால் அதிசயத் திறவுகோலாகிறது?**
இன்பத்தின் கதவைத் திறப்பதுவும், துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் மனிதன் நாக்கினால் பேசும் உண்மையால் தான். எனவே நாக்கு 'ஓர் அதிசயத் திறவுகோல்' ஆகும்.

13. பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிகாலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிகாலம் முதலில் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. காலமாற்றத்தால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றிய உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது. **[PTA-4]**

**i) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?**
பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பெய்தது. அதனால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.

**ii) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.**
வினைத்தொகை – பெய்மழை

**iii) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?**
வற்றாத தூயநீர், தூயகாற்றுடைய இயற்கை சூழல், உயிர்களுக்கான உணவு ஆகியனவாகும்.

14. பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெயாக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோர்க்குக் கடன் என்கிறார் நல்லந்துவனார். அவ்வாறே, உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார். **[PTA - 4]**

**i) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெயாக இருப்பது எது?**
அன்பு என்னும் சுடருக்கு எண்ணெயாக இருப்பது தியாகம் ஆகும்.

**ii) சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன?**
பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

**iii) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் குறிப்பிடுவது எதனை?**
உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

**iv) உதவி செய்தலை 'உதவியாண்மை' என்று குறிப்பிடுபவர் யார்?**
உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார்.

**v) சான்றோர்க் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுவது யாது?**
பிறர் துன்பத்தை தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோர்க்குக் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

15. சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன: சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்கு தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன. **[PTA - 5]**

**i) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைசெய்கின்றன?**
கலை, அழகியல், புதுமை ஆகிய எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைசெய்கின்றன.

**ii) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.**
- மக்களின் கவலையைப் போக்குகின்றன.
- செய்திகளைத் தரும் ஊடகங்களாக இருக்கின்றன.

**iii) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?**
சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன.

| | |
|---|---|
| 16. ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீ∴ப்) என்னும் ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். **[PTA-5]** | **i) ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?**<br>ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும்.<br>**ii) தமிழ்மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர்?**<br>தமிழ்மக்கள் இலைகளை தாள், இலை, தோகை, ஓலை எனப்பாகுபாடு செய்தனர்.<br>**iii) தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்விதம் விளங்கிக்கொள்ளலாம்?**<br>தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.<br>**iv) மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**<br>எ.கா: Leaf - இலை<br>**v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**<br>தமிழ்மொழிவளம் |
| 17. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் எனப் பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீட்டிற்கு வந்தவருக்கு, வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது. **[PTA -6]** | **i) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?**<br>'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.<br>**ii) விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவது யாது?**<br>நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன்கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.<br>**iii) நம்முன்னோர்களின் மகிழ்ச்சி எதில் இருக்கிறது?**<br>வீட்டிற்கு வந்தவருக்கு, வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளிப்பதில்தான் நம்முன்னோர்களின் மகிழ்ச்சி இருந்திருக்கிறது.<br>**iv) பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் விருந்தோம்பல் குறித்த செய்தியை எழுதுக.**<br>விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் குறிப்பிடப்படுகிறது.<br>**v) பெண்களின் சிறப்பு பண்புகளில் ஒன்று எது?**<br>பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று விருந்தோம்பல். |
| 18. தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார். **[MDL-19]** | **i) விருந்தினர் என்போர் யாவர்?**<br>வீட்டிற்கு வரும் முன்பின் அறியாத புதியவர்களே விருந்தினர் எனப்படுவர்.<br>**ii) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?**<br>'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் விருந்து குறித்துக் கூறுகிறார்.<br>**iii) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**<br>விருந்தோம்பல் |

| வி.எண் : 32 – 34★ | பகுதி – III : பிரிவு – 2<br>செய்யுள் வினாக்கள் | 2× 3 = 6 |
|---|---|---|

**குறிப்பு :** செய்யுள் பகுதியிலிருந்து மூன்று மதிப்பெண் வினாக்கள் 3 கொடுத்து 2 எழுதுமாறு கேட்கப்படும்.
✱ **34 ஆவது வினா – கட்டாய வினா** - திருக்குறள் தவிர ஏனைய மனப்பாடச் செய்யுள்களிலிருந்து இரு பாடல்கள் கொடுத்து ஒன்று எழுதுமாறு கேட்கப்படும். இதற்கு பக்க எண் 3 மற்றும் 4 காண்க.

| வி.எண் : 35 – 37 | பகுதி – III : பிரிவு – 3<br>இலக்கண வினாக்கள் | 2× 3 = 6 |
|---|---|---|

**குறிப்பு :** இப்பகுதியில் இலக்கணப் பகுதியிலிருந்து மூன்று மதிப்பெண் வினாக்கள், 3 வினாக்கள் கொடுத்து 2 எழுதுமாறு கேட்கப்படும். அணி மற்றும் அலகிடுதல் பகுதிகளை நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.

| வி.எண் : 38 – 42 | பகுதி – IV<br>ஐந்து மதிப்பெண் வினாக்கள் | 5× 5 = 25 |
|---|---|---|

## வி.எண் : 38 – செய்யுள் பகுதியிலிருந்து நெடுவினா கேட்கப்படும்

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 செய்யுள் நெடுவினாக்களைக் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். செய்யுள் பகுதியில் உள்ள அனைத்து நெடுவினாக்களையும் படித்துக் கொள்ளவும்.

## வி.எண் : 39 – இரண்டு கடிதம் கொடுத்து ஒன்று எழுதுமாறு கேட்கப்படும்

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 கடிதம் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும்.

| உறவினருக்குக் கடிதம் | | முறையீட்டு விண்ணப்பம் | |
|---|---|---|---|
| 1. நாள், இடம் | ½ | 1. அனுப்புநர், பெறுநர் | 1 |
| 2. விளித்தல் | ½ | 2. விளித்தல், பொருள் | ½ |
| 3. கடிதச்செய்தி | 2 ½ | 3. கடிதச்செய்தி | 2 |
| 4. இப்படிக்கு | ½ | 4. இப்படிக்கு, நாள், இடம் | 1 |
| 5. உறைமேல் முகவரி | 1 | 5. உறைமேல் முகவரி | ½ |

**முக்கிய குறிப்பு :** கடிதத்தில் எந்த இடத்திலும் மாணவர்கள் தங்கள் பெயர்களை எழுதக்கூடாது. வினாவில் கொடுக்கப்பட்டுள்ள பெயரை மட்டுமே எழுத வேண்டும். வினாவில் பெயர் குறிப்பிடவில்லையெனில் 'அஅஅ'... 'இஇஇ' போன்று குறிப்பிடவும்.

## புத்தகத்தில் உள்ள கடிதங்கள்

1. **மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (TB) (இயல்– 2) [PTA - 4, MDL-19]**

5, கம்பர் தெரு
திருச்சி - 5
20.06.2023

***அன்புத்தோழன் ஜீவா,***

வணக்கம்.

நான் நலம். நீ நலமா? உன் பெற்றோர் நலமா? உன் இல்லத்திலுள்ள அனைவரின் நலமும் அறிய ஆவலாக உள்ளேன். உன் பேச்சாற்றலால் நீ பல போட்டிகளில் பங்கு கொண்டு வருகிறாய். உன் திறமையால் பல பரிசுகளைக் குவித்து வைத்திருக்கிறாய். அதனை எண்ணும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

உன் திறமைக்கு மகுடம் சூட்டியதைப்போல அண்மையில் மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றிருப்பது 'உன் அறிவுத்திறனுக்குக் கிடைத்த பரிசு' என்று எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து நீ போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும். வெற்றி உனக்குக் கிட்டும்! உன் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். இக்கடிதத்துடன் உனக்கு ஒரு நூலைப் பரிசாக அனுப்பியுள்ளேன். வரும் விடுமுறையில் சந்திப்போம்.

நன்றி!

**இப்படிக்கு**
அன்புத்தோழி,
க. வளர்மதி.

**உறைமேல் முகவரி**

ந. ஜீவா,
த/பெ. நலங்கிள்ளி,
20, பாரதியார் நகர்,
சேலம் - 10.

4. எண்–6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக. (அல்லது) எழுத்தர் பணியினை வேண்டி, வேலைவாய்ப்பிற்காக கொடுக்கப்பட்ட தன்விவரப் பட்டியலைப் பூர்த்தி செய்க. (அல்லது) தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக. (அல்லது) பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக. பெயர் : அருளன், தந்தை : செல்வம், முகவரி : கதவு எண். 25, திலகர் தெரு, மதுரை வடக்கு – 2. **[MDL – 19, PTA – 5, SEP – 2020, AUG – 2022]**

**பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | **த. பூங்கொடி** |
| 2. | பாலினம் | : | **பெண்** |
| 3. | பிறந்த நாள் மற்றும் வயது | : | **23.10.1996, 26** |
| 4. | தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. | பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | **தமிழரசு** |
| 6. | வீட்டு முகவரி | : | **6, பாரதியார் தெரு, நீலகிரி** |
| 7. | தொலைபேசி / அலைபேசி எண் | : | **8999632584** |
| 8. | பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் | : | **426 / 500** |
| 9. | தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. | பயின்ற மொழிகள் | : | **தமிழ், ஆங்கிலம்** |
| 11. | தட்டச்சு | : | **தமிழ், ஆங்கிலம் - சீனியர் கிரேடு** |
| 12. | கணினி | : | **PGDCA and Tally** |

(**குறிப்பு :** இப்படிவத்தில் கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று மற்ற வினாத்தாள்களில் கேட்டகப்பட்ட வினாவிற்கு நீங்கள் சுயமாக தன்விவரப் பட்டியலை பூர்த்தி செய்து கொள்ளவும்.)

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் **<u>கணினிப் பயிற்றுநர்</u>** பணியினைத் தந்தால், என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
**த. பூங்கொடி**

இடம் : நீலகிரி
நாள் : 23.09.2023

## வி.எண் : 42 - மொழிபெயர்ப்பு

**குறிப்பு :** இப்பகுதியில் மொழிபெயர்ப்புக் கேள்வி அல்லது மொழியோடு விளையாடு பகுதியில் இருந்து ஏதேனும் ஒரு கேள்வி கேட்கப்படும்.

**மொழிபெயர்ப்புக் கேள்வி – 10 (இயல் – 1), 24 (இயல் – 2), 38 (இயல் – 3), 54 (இயல் – 4), 66 (இயல் – 5), 77 (இயல் – 6), 96 (இயல் – 7), 113 (இயல் – 8), 129 (இயல் – 9)**

**செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா : உரைப்பத்தியை படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**பக்க எண் : (பகுதி –3, பிரிவு – 1) 144 – 149**

| வி.எண் : 43 – 45 | பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் | 3 × 8 = 24 |
|---|---|---|

## வி.எண் : 43 - உரைநடை நெடுவினா

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 உரைநடை நெடுவினாக்கள் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். உரைநடை பகுதியில் உள்ள அனைத்து நெடுவினாக்களையும் படித்துக் கொள்ளவும்.

## வி.எண் : 44 - துணைப்பாடம் நெடுவினா

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 துணைப்பாட நெடுவினாக்கள் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். துணைப்பாடப் பகுதியில் உள்ள அனைத்து நெடுவினாக்களையும் படித்துக் கொள்ளவும்.

## வி.எண் : 45 - பொதுக்கட்டுரை

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 பொதுக்கட்டுரைகள் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். இப்பகுதியில் உள்ள அனைத்து பொதுக்கட்டுரைகளையும் நன்கு படித்துக் கொள்ளவும்.

- இதுவரை தேர்வில் கேட்கப்பட்ட பொதுக்கட்டுரைகள் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.
- இதை தவிர நெடுவினாகள், கற்பவை கற்றபின் போன்ற பகுதிகளில் உள்ள பொதுத்தலைப்புகள் கட்டுரையாக கேட்கப்படலாம். அவற்றை நன்கு படித்துக் கொள்ளவும்.